**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

உ

அன்பே சிவம்

# நீத்தார் கடன்



## தமிழ் மறை வழிபாட்டு நூல்

நூலாசிரியர் :

தவத்திரு. தொண்டர்சீர்பரவுவார்

உ

அன்பே சிவம்

என் கடன் பணி செய்து கிடப்பதே—(அப்பர்)

# நீத்தார் கடன்

இவ்வுலக வாழ்வை நீத்து மறைந்த
பெரியோர்களுக்கு மகன் முதலியோர் செய்ய
வேண்டிய முறைகளைக் கூறும்

## தமிழ்மறை வழிபாட்டு நூல்

நூலாசிரியர் :
தவத்திரு. தொண்டர்சீர்பரவுவார்
**[இரா. ப. தங்கவேலனார்]**
ஆசிரியர், திருமுறைக்கழகம், கோட்டை, ஈரோடு.

வெளியீட்டு நாள் :
பிரபவ ஆண்டு மார்கழித்திங்கள் 21-செவ்வாய்
புனர் பூச நாள் (5—1—1988)

அருள்மொழி அரசு

# திருமுருக கிருபானந்த வாரியார்

அவர்களின்

# அணிந்துரை.

உ

முருகா

உலகத்தில் எல்லாப் பாவங்களுக்கும் கழுவாய் உண்டு. கள்ளுண்டல், பொய் புகலல், பிறன்மனை சேர்தல், களவு, கொலை, புலை, சூது முதலிய பாவங்கள் செய்தோர் குருவழிபாட்டினாலும், இறை வழிபாட்டினாலும், அப்பாவங்களிலிருந்து விடுபடுவர். நன்றி கொன்ற பாவத்திற்கு மட்டும் கழுவாய் இல்லை நன்றி கொன்றவன் மீளா நரகிற்கு ஆளாவான்.

" ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவே
நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடின்றே —(புறநானூறு.)

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்
உய்வுஇல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு -(திருக்குறள்)

ஆதலால் நம்மைப் பேணி வளர்த்த தாய் தந்தை முதலியோர் இறந்தபின் அவருடைய ஆன்மா சாந்தி அடையும் பொருட்டும், நன்றி மறவாமைப் பொருட்டும், நீத்தார் கடன் ஒவ்வொருவரும் செய்தல் மிகமிக அவசியம் ஆகும்.

நீத்தார் கடன் செய்வதனல் இறந்த உயிர்கள் நன்மை அடைகின்றன. நீத்தார் கடன் என்ற நூலைத் தெளிவான ஆராய்ச்சியுடன் சிவமனம் கமழ என் ஆத்ம நண்பர் ஈரோடு உயர்திரு. தங்கவேலனர் அவர்கள் எழுதியிருக்கின்ருர். இந்த நூல் பல ஐயங் களை அகற்றி நல்வழி காட்டுகிறது.

தங்கவேலனர் கூறிய மதியும், சீரிய சமய நெறி யும் உடையவர். இவருடைய ஆராய்ச்சித்திறனும், சமயப் பற்றும் பாராட்டுதற்கு உரியன.

இந்த நூலை எனது அன்பரும், சைவச்செம்மலு மான திரு. S. சிங்கார முதலியார் அவர்களின் மைந்தர்கள் தம்தந்தையாரின் நினைவாக வெளியிட்டு ஞானதானமாக வழங்குகிருர்கள்.

இதனை எல்லோரும் படித்து நீத்தார் கடனைத் தீர்த்துச் சிவனருளுக்குப் பாத்திரமாக ஆவார்களாக.

அன்பன்,

கிருபானந்தவாரி.

சிவமயம்

# நீத்தார் கடன்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இருக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தில்
கொல்களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

—புறநானூறு (9)

(நெட்டிமையார், பாண்டியன் பல்யாகசாலை
முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியது)

அன்புடையீர்,

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கடுத்துப் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ளுதற்கு முன்பிருந்தே பண்டைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள், இறந்து பட்ட தங்கள் முன்னோர்களுக்கு வாழ்த்தும் வழிபாடும் திங்கள் தோறும், ஆண்டு தோறும் செய்துவந்தனர் என்பதை திருக்குறள், புறநானூறு முதலிய நூல்களினின்றும் தெரிந்து கொள்கிறோம். வள்ளுவப் பெருந்தகை, மறைந்த தம் முன்னோர்களை மறவாது போற்றி வழிபடுவது தலையாய கடன் என்று அறிவுரை கூறுகிறார்.

''தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.'' (குறள் 43)

சிறப்புடைப் பொருளை முந்துறக்கிளத்தல் என்ற உத்திக்கு ஏற்ப, ஒரு மனிதன் செய்ய வேண்டிய ஐந்து வகைச் செலவு இனங்களில் தென் புலத்தோராகிய இறந்தோர்க்குச் செய்யவேண்டிய கடமையை முன்னர் வைத்துப் பாடியுள்ளார். இறந்துபட்ட உயிர்கள் யமனுக்கு உரிய திசையாகிய தெற்கில் வாழ்வதாகக் கருதுவது சாத்திர சமய மரபு. ஆதலால் அவர்களைக் குறிப்பிடும் போது தென்புலத்தார் என்ற சொல்லால் குறிப்பிடு கின்றார்.

இறந்து பட்டோர்க்குச் செய்யும் வழிபாட்டுக் காலங்களில் வழிபாடு செய்வோர் (எள்ளும் நீரும் விடுவோர்) தெற்கு நோக்கிச் செய்வது இதன் பொருட்டே ஆகும். புறநானூறு என்னும் சங்க காலத்து நூலில் நெட்டிமையார் என்னும் புலவர் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி யைப் பாராட்டிப் பாடிய 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' என்று தொடங்கும் பாடலில்

'தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்' என்று

குறிப்பிடப் படுவதிலிருந்து நீத்தார் வழிபாடு சங்க காலத்திலேயே வழக்கத்தில் இருந்தது என்பது தெரிகிறது.

அப்பர் பெருமான்.

'சிறு விறகால் தீ மூட்டிச் செல்லா நிற்பர்' என்றும், பட்டினத்தடிகள்,

நான் பெற்ற மைந்தரும் பின் வலம் வந்து குட முடைத்தார் என்றும் இறந்தோர்க்குச் செய்யும் சில சடங்குகளைக் குறிப்பிடுகின்றனர். எனவே சங்ககாலம் முதற்கொண்டே இறந்தோர்க்குச் செய்யும் வழிபாடு தமிழ் மக்களிடையே இருந்து வந்தது என்பதை அறிகிறோம். இச்சடங்குகள் எல்லாம் அருளாளர்கள் ஆகிய ஆசிரியன்மார்கள் முன்னின்று நடத்தி வந்தனர். காலப்போக்கில் அருளா சிரியன்மார்கள் செய்து வந்த நிலைமாறி, இச்சடங்குகளுக்கு ஊதியம் பெறும் பார்ப்பனப் புரோகிதர்களால் திவசம், திதி என்ற பெயரால் யாவர்க்கும் தெரியாத ஒரு மொழி யில் இவை செய்யப்பட்டு வருவதை காண்கிறோம். இந்நிலை மாறி, ஒவ்வொரு தமிழ் மகனும் இறந்து பட்ட தமது தாய் தந்தை முதலிய முன்னோர்களுக்கு அவரவர்களே செய்து கொள்ளுகின்ற வகையில் தமிழ் மறைகளினின்று எடுத்த, எழுத்துப்பெற்ற ஒரு நூல் வேண்டுமெனப் பலர் விரும்பினர்.

''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு'' (குறள்)

சிவபூசைச் செல்வராகிய S. சிங்கார முதலியார் என்கிற பெருமாள் முதலியார் உழைப்பால் உயர்ந்த உத்தமர் ஆண்டவனிடத்தும் அடியார்களிடத்தும்

அளவிலா பக்தி உடையவர் பதி புண்ணியங்களையும் பசு புண்ணியங்களையும் பலசெய்த பண்பாளர்.

ஈரோடு திருமுறைக்கழகத்தின் காப்பாளராக இருந்து பலசீரிய தொண்டினைச் செய்த சீலர் இத் தகையை சீலரின் மறைவு நாட்டிற்கும் வீட்டிற்கும் பேரிழப்பாகும்.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்'' - என்பது வள்ளுவர்

வாய்மொழி. இங்கே 'எச்சத்தால்' எனப்படுவது மக்களால் எனக்கொள்க. அவருடைய மக்கள் ஐவரும் தந்தையினும் மிக்க பண்பாளர்கள்.

'நீத்தார் கடன்' என்னும் இந்நூலை தங்கள் தந்தையாரின் நினைவாக வெளியிடுகின்றனர்.

இந்நூலைப் பெறும் அன்பர்கள் இதில் கண்டுள்ள படி தங்கள் மறைந்த பெருமக்களுக்கு நீர் கடன் செய்து கடவுள் அருளையும் பிதுர்களின் நல்லாசியும் பெற்று சிறக்க வாழ்வார்களாக.

''தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

இங்ஙனம்,
தொண்டர் சீர்பரவுவார்,
**இரா. ப. தங்கவேலனார்**

அன்பே சிவம்

# நீத்தார் கடன்

இறப்பு

ஒருவர் இறக்கும்போது எந்த எண்ணத்தோடு இறக்கின்றாரோ அதுவே மறு பிறப்பிற்கு எது வாகும் என்பது ஆன்றோர் முடிவு.

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா! சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா, இங்குற்றேன் என் கண்டாயே.

(அப்பர்)

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி என் அறிவு அழிந்திட்டு
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது ஒன்று வேண்டுவன யான்
செய்யும் திருவொற்றி யூருடையார் திருநீறும் இட்டுக்
கையும் தொழச் செய்து ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே.

(பட்டினத்தடிகள்)

இறக்கின்றபோது பொறி புலன்கள் கலங்கி நிற்கின்ற காலமாதலால் அப்போது இறப்பவர்கள் தாங்களாகவே இறைவனை எண்ணுகின்ற நிலை அரிது ஆகையால் அருகில் இருக்கின்ற மற்றவர்கள், இறக்கப் போகின்றவர்களைச் சூழ்ந்து கொண்டு அழுது அரற்றி, அவர்களை மேலும் கலங்கச்

செய்யாமல் கீழ்க்கண்ட பாடலை அவர்களருகில் அமர்ந்து மென்மையாக ஓதி, உணர்வில் கலக்கச் செய்யவேண்டும்.

## திருவாசகம்
## நீத்தல் விண்ணப்பம்

கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட
விடையவனே! விட்டிடுதி கண்டாய்; விறல் வேங்கையின் தோல்
உடையவனே! மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
சடையவனே! தளர்ந்தேன் எம்பிரான்! என்னைத் தாங்கிக் கொள்ளே.

(அடைக்கலப் பத்து)

வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப்பூண்பவனே பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின்திருவருளால் என்பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

மாவடு வகிர் அன்ன கண்ணி பங்கா! நின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய் நின் குறிப்பறியேன்
பாவிடையாடு குழல்போல் கரந்து பரந்ததுள்ளம்
ஆ! கெடுவேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே.

உயிர் நீங்கிய பிறகு கூட்டத்தில் தெற்கு திசையில் தலை வைத்துக் கிடத்தி, தலைமாட்டில் ஐந்து மூக்கு உள்ள குத்துவிளக்கை எற்றி அரிசி, கருப்பட்டி, தேங்காய், பழம் முதலியன வைத்து வழிபாடு செய்து துக்கம் கொண்டாடுதல் வேண்டும். இங்கு வைத்துப் படைக்கப் பட்ட அரிசி இடுகாட்

டிற்குக் கொணர்ந்து இடுதல் வேண்டும். இதை வாய்க்கரிசி என்பர்.

அள்ளியிடுவது அரிசியோ தாய் தலைமேல் என்பர்.
(பட்டினத்தடிகள்)

## குத்து விளக்கு ஏற்றுவதின் மெய்ப்பொருள்

குத்துவிளக்கை மனிதன் உடல்போல் அமைத்துள்ளனர். அடிப்பாகம் பாதம், நடுப்பாகம் உடல், மேலே ஐந்து மூக்குப் போல அமைந்து எண்ணெய் ஊற்றும் பகுதி முகம். அதற்கு மேல் பகுதி தலை.

நமது உடலில் ஆண்டவனால் கொடுக்கப்பட்ட ஆற்றல் ஐம்பொறிகள் வழியாக (மெய், வாய், கண், மூக்கு செவி) செலவழிக்கப்பட்டுக் கடைசியில் மரணம் அடைந்துள்ளது. விளக்கின் முகப் பகுதியில் ஊற்றப்படுகின்ற எண்ணெய் (ஆன்ம சக்தி) ஐந்து திரிகளும் எரிவதனால் எண்ணெய் தீர்ந்து, கடைசியில் திரியும் எரிந்து சாம்பலாகின்றது.

ஐம்புலன் உணர்வுகளும் முகத்திலேயே சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. புலன்களின் வழியே நமது ஆன்ம ஆற்றல் செலவழிந்து உயிர் நீங்கும் நிலையைக் காட்டவே இறந்தவர் தலை மாட்டில் குத்துவிளக்கை ஏற்றுகின்றனர்

## கை கொடுத்தல்

இறந்தவர்க்கு அவருடைய மகனே வழிபாடு செய்தல் வேண்டும். மகன் இல்லையானால் அந்த முறையில் உள்ள தாயாதிகள் (பங்காளிகள்) செய்யலாம்.

இறுதிச் சடங்கைத் தந்தைக்கு மூத்த மகனும் தாய்க்குக் கடைசிப் பையனும் செய்தல் மரபு.

துக்கம் விசாரிக்கச் செல்பவர்கள். இறந்தவரின் மகனிடம் சென்று, அவன் கையை விரித்து நிற்க, அக்கைகளைத் தொட்டு விட்டு உடன் அமர்ந்து துக்கம் விசாரிப்பது மரபு.

இதில் இரண்டுவகைப் பொருள் அடங்கி உள்ளன. தன் தந்தை இறந்துவிட்டபடியால், தனது மாட்டாமை கருதித் தன் நிலையைக் கை விரித்து நிற்கத் "தந்தையை நீ இழந்தாலும் நாங்கள் கை கொடுத்துத் தாங்குன்றோம்" என்று உற்றார் உறவினர், உறுதி அளிப்பது ஒன்று.

மற்றொன்று இந்த இழப்பு உமக்கு மட்டும் நேர்ந்தது அன்று. பிறந்த ஒவ்வொரு வருக்கும் இறப்பு வருவது இயல்பு. இது மெய்ம்மை. ஆகையால் நீ வருந்தாதே என்று இறந்தவரின் மகன் கையில் கை அடித்துச் சத்தியம் செய்து அவனுக்கு ஆறுதல் கூறுவது ஆகும்.

### ஒப்பாரி சொல்லி அழுதல்

ஒருவர் இறந்துவிட்டால் அவரோடு தொடர் புடையோர் அவர் பிரிவிற்காகக் கண்ணீர் சிந்தி

அழுதல் உலகில் எல்லா இனத்தவர்க்கும் இயல்பு.

ஆனால் இறந்தவர் உடலை நடுக்கூட்டத்தில் கிடத்தி, அவருடைய உற்றார், உறவினரும், மற்ற வீட்டுப் பெண்களும், பிணத்தைச் சூழ்ந்து அமர்ந்து இசை யோடு, பாடல்களைச் சொல்லி அழுதல் தமிழரி டையே உள்ள தனிப்பட்ட வழக்கம் ஆகும். தமிழர், தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்று மூன்று வகையாகப் பிரித்து அதை வளர்த்தனர் அவற்றில் இசைத்தமிழின் இன்றியமையாத தன்மையை அறிந்தனர். இசை கேட்டுச் செடி கொடிகள் கூட நன்கு வளர்கின்றன என்பது இன்றைய அறிவியல் கண்ட முடிவு. தமிழர், குழந்தை பிறந்த 7-ஆம் நாளே தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடி உறங்க வைப்பர். தொட்டிலில் பாட்டு, விளையாட்டில் பாட்டு, திருமண வீட்டில் பாட்டு. இசை முழக்கம், கடைசி யில் இறந்த வீட்டில் இசையோடு பாட்டு தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும் என்பது போலத் தொட்டிலிலிருந்து சுடுகாடு மட்டும் இசை யுடன் தமிழன் தொடர்பு கொண்டான்.

அதனாலன்றோ தேசியக் கவி நாமக்கல்

இராமலிங்கம் பிள்ளை

"இழவில் அழுகின்ற பெண் கூட
இசையோடு அழுவது கண்கூடு"

என்று பாடிப் போந்தனர்.

வரி = இசைப் பாட்டு. ஒப்பு + வரி = ஒப்பாரி என்று ஆயிற்று. இப்பாடல்கள் ஒன்றை ஒப்பவே

மற்றொரு வரியும் சேர்ந்து இரண்டு இரண்டு வரிகளால் பாடப்பட்டுள்ளன. ஆதலால் ஒப்பாரி என்று பெயர் ஆயிற்று. மகிழ்ச்சியானது பிறரிடம் சொல்லச் சொல்ல மிகுதிப்படும் ஆனால் துக்கமோ பிறரிடம் சொல்லச் சொல்லக் குறையும், அதனாலன்றோ ''கல்லோடாயினும் சொல்லி அழு'' என்ற பழமொழி தோன்றியது அப்பாடல்களில் பல வகைகள் உள்ளன. இறந்தவனுடைய வரலாறு, குடும்ப வரலாறு, இறந்தவருக்கு ஆறுதல் மொழி ''உனக்கு மட்டும் இந்த இழப்பில்லை; இழப்பு யாவருக்கும் வருவது இயல்புதான்'' எனத் தங்கள் வீட்டு இழப்புக்களையும் நினைவுபடுத்தி ஆறுதல் அளித்தல்.

## ஒப்பாரிப் பாடல்கள் சில

1) பூசைக்குப் பண்ணின பொன்னம் சிறு-கடகம்
பூசை முடியிலியே நீ பூ உதிர வாழிலியே.
ஆசைக்குப் பண்ணின அரும்பு சிறு கடகம்
ஆசை முடியிலியே நீ அரும்பு உதிர வாழிலியே.

## பக்தன் வீட்டில் துக்கப்பாடல்

2) நடக்காத்திருப்பதிக்கு நாலு லட்சம் சன்னதிக்கு
நடந்துவரம் கேட்டவர்கள் நல்லவரம் கேட்கலியே
ஏகாத்திருப்பதிக்கு ஏழு லட்சம் சன்னதிக்கு
ஏகிவரம் கேட்டவர்கள் எற்றவரம் கேட்கலியே.

## பரத்தையர் விருப்பன் வீட்டில்

3) கூத்திக்கு இறைத்த பணம் கோடிக்கு மேலாகும்
(அதில்)
கோயிலொன்று எடுத்தாலும் கோடி சனம்
கை எடுக்கும்.
வேசிக்கு இறைத்த பணம் வெகு கோடி தானாகும்
(அதில்)
கோயிலொன்று எடுத்தாலும் கோடி சனம்
கை எடுக்கும்,

## குடும்பத் தலைவன் இறந்த வீட்டில்

4) பாரி வயற்காடு பத்து லட்சம் நற்பூமி —
பாலனுக்கு வேணுமென்று பாரிவிலை கூறினது;
கூட (இன்று)
பாலன் தலை எடுக்கப் பங்காளி
கொள்ளேயிட்டான்
ஏரி வயற்காட்டு எட்டு லட்சம் நற்பூமி
ஏலனுக்கு வேண்ணுமென்று ஏறிவிலை கூறினது
(இன்று)
ஏலன் தலை எடுக்க எதிராளி
கொள்ளேயிட்டான்

## திருமணம் ஆகிச் சில மாதங்களில் இறந்த வீட்டில்

5) பந்தக்கால் நட்டகுழி பள்ளம் மறையிலியே
மூர்த்தக்கால் நட்டகுழி மேடு மறையிலியே
பந்தல் பிரிக்கலியே வந்தசனம் போகலியே
காப்புக் கழட்டலியே கண்டசனம் போகிலியே

மேற்கண்டவாறு பாடி அழுவது இயல்பாக இருந்தாலும், வயது முதிர்ந்தோர்கள் சிவதீக்கைப் பெற்றவர்கள் இறந்தால் முன்னே சொல்லிய ணெண்ணம் வழிபாடு செய்த பிறகு கீழ்க்கண்ட பஞ்ச புராணங்களைச் சொல்லி வழிபட்டுச் சிவபுராணம் முதலாகத் திருவாசகமே ஓதல்வேண்டும்.

## பஞ்ச புராணம் (தேவாரம்)

ஐயினால் மிடறு அடைப்புண்டு ஆக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்எழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன் முன் மதியம் சூடும்
ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
அகம் குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே
(அப்பர்)

## திருவாசகம்

இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்து போய் அருநரகில் வீழ்வோர்கு
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.
(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்துக்
களைகணே ஓலம் என்று ஓலிட்டு
என்பெலாம் உருக்கும் அன்பர்தம் கூட்டத்தில்
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடி நின்று ஆட
பனிமலர் சோலைசூழ் மொழுப்பில
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு

நிட்டையிலா வுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரில்லா வண்ணாங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து

அட்ட மூர்த்திக்கு என் அகம்நெக
　　ஊறும் அமிர்தினுக்கு ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத் தன்பாற்படுத்
　　தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

## திருச்சிற்றம்பலம்

பொதுவாக இறந்தோர் உடலுக்கு எண்ணை யிட்டுக் குளிப்பாட்டிப் புத்தாடை அணிவித்து வழி பாடு செய்து பாடையில் எடுத்துச் சென்று, மண் ணில் புதைத்தோ எரித்தோ விடுதல்வேண்டும்.

## சாமதி செய்தல்

புதைத்தல், எரித்தல் ஆகிய இரண்டு முறைகளும் தொன்றுதொட்டு வரினும், சிவநெறிச் செல்வர்களின் உடலை எரித்தல் பெரும் பாவம் என்று திருமூலர் மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றார். சிவநெறிச் செல்வர்களைச் சமாதி செய்தலே சிறந்ததெனக் கட்டளையிடுகின்றார். சிவநெறிச் செல்வர்களின் உடலில் தீயிடுதல் சிவாலயத்திற்குத் தீயிட்ட தோடம் உண்டாகும் என்று எச்சரிக்கின்றார்.

இவரை ஒட்டியே இராமலிங்க அடிகளாரும், சமாதியையே வற்புறுத்துகின்றார்.

## திருமந்திரம்

1) அந்தமில் ஞானிதன் அகந் தீயினில்
வெந்திடின் நாடெல்லாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரின் உண் செரு
வந்து நாய் நரிக்கு உணவாகு வையகமே

2) எண்ணிலா ஞானி உடல் எரிதாவிடில்
அண்ணல் தன் கோயில் அழலிட்டதாங்கு ஒக்கும்
மண்ணில் மழை விழா வையகம் பஞ்சமாம்
எண்ணரும் மன்னர் இழப்பர் அரசே.

(திருமூலர்)

## திரு அருட்பா

பரன் அளிக்கும் தேகம் இது சுடுவது அபராதம் எனப்
பகர்கின்றேன் நீர்

சிரநெளிக்கச் சுடுகின்றீர் செத்தவர்கள் பற்பலரும்
சித்தசாமி

உரனளிக்க எழுகின்ற திருநாள் வந்து அடுத்தன
யீது உணர்ந்து நல்லோர்

வரன் அளிக்கப் புதைத்த நிலை காணீரோ கண்கெட்ட
மாட்டினீரே.

—இராமலிங்க அடிகள்

இன்னும் பெரும்பாலான சமயத்தார் இறந்தோர் உடலைப் புதைத்தலையே (சமாதி) மேற்கொண்டு உள்ளனர்.

## சிவதீக்கை இறக்குதல்

சிவ தீக்கை பெற்றவர்கள் இறந்தால் சிவ தீக்கை இறக்கித் திரு முழுக்காட்டி வழிபட்டுச் சமாதி செய்தல் வேண்டும்.

உடலினுள் உயிர் வாழ்கின்றது. உயிரினுள்ளே சிவம் விளங்குகின்றது. உயிர் நீங்கினால் உடல் சவமாகின்றது.

உயிர் பிரிந்த உடலில் மீண்டும் சிவத்தை எழுந் தருளப் பண்ணி, வழிபட்டுச் சமாதி செய்கின்ற முறைக்கே தீக்கை இறக்குதலின் நுண்பொருள் ஆகும்.

சவம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் ஈசான திசையில் கலசம் நிறுவுதல் வேண்டும்.

வாழையிலையில் பச்சரிசியைப் பரப்பி, அறு கோணச் சக்கரத்திலுள்ள பிரணவத்தை எழுதி அதன் சிவ சக்தி கலசங்களில் நீர் நிறைவித்து அவற்றின் மீது மாவிலை தேங்காய் வைத்துச் சிவ சக்தியை எழுந்தருளப் பண்ணி (ஆவாகனம்) வழிபடுதல் சிவ சக்தி கலசங்களைச் சுற்றி 5 சிறு மண் செப்புகளில் பஞ்சகவ்வியத்தை நிரப்பி வழிபடல் வேண்டும்.

இச்சடங்குகளை முன்னின்று இறந்தோரின் புதல்வனைக் கொண்டு வழிபாடு செய்தல்.

## பிள்ளையார் வழிபாடு

மஞ்சள் தூளில் சிறு பிள்ளையார் பிடித்து வைத்துப் பிள்ளையார் வணக்கம் செய்து வழிபாட்டை தொடங்க வேண்டும். மஞ்சள் பிள்ளையாரை எழுந் தருளப் பாடுதல்.

## பிள்ளையாரை எழுந்தருளப்பண்ணுதல்

உருகும் அடியார் அள்ளூற உள்ளே ஊறும் தேன் வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த ஒளியே வருக

திருகு மனத்தார் உணர்வினுக்குச் சேயோய் வருக
ஏமையீன்ற செல்வா வருக; உமையீன்ற சிறுவா வருக

பருகும் விழியால் அமுதே வருக நறும்பாகே வருக
பைங்கூழ் தழைக்கப் பரப்பு முகிலே வருக

வரைகிழித்த முருகவே ளுக்கு முன்னு தித்த முதல்வா வருக
மூரிக்கலசை செய் கழுநீர் முதல்வா, வருக, வருகவே.

என்ற பாடலைச் சொல்லித் துதித்துத் தூபம் தீபம் காட்டி வழிபாடு செய்தல் வேண்டும்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும்எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### (சிவ, சக்தி எழுந்தருளச் செய்தல்)

இனி சிவ கலசத்தில் இறைவனை எழுதருளச் செய்யச் சில மலர்களைக் கையில் எடுத்துக்கொண்டு, இரண்டு கைகளையும் சேர்த்துக் கைகளைக் கூடலை போல் விரித்து, மலர்களை வைத்துக்கொண்டு உள்ளத்தொளிரும் சிவப்பரஞ்சுடரையும், ஆகாய வெளியில் எங்கும் கலந்திருக்கும் சிற்சத்தியையும் எழுந்தருளக் கருதிக் குவித்த கைகளை மார்பு, சிரம் ஆகிய இடங்களில் வைத்துத் தியானித்துச் சிவகுடத்தில் கீழ்வரும் பாடல்களைச் சொல்லி மலர்களைத் தூவுதல் வேண்டும்.

## தேவாரம்

மனத் தகத்தான் தலை மேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத் தகத்தான் இமய வர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்திற்கு அப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்து உச்சி உள்ளான்
காளத்தியான் அவன் என் கண்ணுளானே.

(அப்பர்)

## திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின்
வழி அடைத்து அமுதே
ஊறி நின்று என்னுள் எழும் பரஞ்சோதி
உள்ளவா! காணவந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை யுறை சிவனே
ஈரில்லாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

கண்பனி அரும்பக்கைகள் மொட்டித்துக்
களேகணே ஓலம் என்று ஒலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர் தம் கூட்டத்தில்
என்னையும் புணர்ப்பவன் கோயில்

பண்பல தெளிதேன் பாடிநின்று ஆடப்
பனிமலர் சோலை சூழ் மொழுப் பின்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு

நிட்டையிலா உடல் நீத்தென்னையாண்ட
நிகரிலா வண்ணங் களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்திந்து
அட்டமூர்த்திக்கு என் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு; ஆலநிழற்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்றபேறு இதனுல்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றி கொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார். (சேக்கிழார்)

## சக்தியை எழுந்தருளச் செய்தல்

முன்னர்க் கூறியபடி சில மலர்களை எடுத்துச் கீழ்வரும் பாடல்களைச் சொல்லிச் சக்திக் கலசத்தின் மேல் தூவி, சக்திக் கலசத்தில் அம்மையை எழுந் தருளச் செய்தல்.

## திரு அருட்பா

மாயை யெனும் இரவில் என் மனை அகத்தே
விடய வாதனை யெனும் கள்வர்தாம்

வந்து மன அடிமையை எழுப்பி, அவனைத்
தமது வசமாக உளவு கண்டு

மேயமதி எனும் விளக்கினை அவித்து
யென் மெய்நிலைச் சாலிகை யெல்லாம்

வேறு உற உடைத்து உள்ள பொருளெல்லாம்
கொள்ளை கொள மிக நடுக்குற்று நின்னையே

நேயமுற ஓவாது கூவுகின்றேன் சற்றும்
நின் செவிக்கு ஏறவில்லையோ

நீதியில்லையோ தரும நெறியும் இல்லையோ! அருளின்
நிறைவும் இல்லையோ! என் செய்கேன்

ஆய மறைமுடி நின்ற தில்லையம்பதி மருவும்
அண்ணலார் மகிழும் மணியே!

அகிலாண்டமும் சராசரமும் ஈன்றருள
பரசிவானந்த வல்லி உமையே.

(இராமலிங்க அடிகள்

## சிவத்தை அருச்சித்தல்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய் போற்றி

ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி

ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி

காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி, போற்றி.

(அப்பர்)

## குங்குமத்தால் **அன்னையை** அருச்சித்தல்

பரந் தெழுந்த சமண் முதலாம்
    பரசமய இருள் நீங்கச்
சிறந் தழுவு சைவநெறி திருநீற்றின்
    ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர்கோன்
    அமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி.

பிறகு, தீபம், தூபம் காட்டி உணவூட்டிப் பஞ்ச புராணம் சொல்லுதல் வேண்டும்.

### தூபம் காட்ட

பெரும் புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும் பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை
                                        உள்ளேவைத்து
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இட
                                        வல்லார்க்குக்
கரும்பினுள் கட்டிபோல்வர் கடவூர் வீரட்டனாரே.
                                        (அப்பர்)

### உணவூட்ட

ஆலம் தானுகந்து அமுது செய்தானை
    ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலம் தான் பெரிதும் உடையானைச் சிந்திப்பாரவர்
    சிந்தை உள்ளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை என்றும் ஏத்தி
    வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
    காணக் கண் அடியேன் பெற்றவாறே.

## கற்பூரம் காட்ட

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்
(சேக்கிழார்)

## பஞ்சபுராணம்

## தேவாரம்

அங்கத்தை மண்ணுக்காக்கி
ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போகமாற்றிப்
பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்தமேனிச் செல்வா
சாதல் நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா
இங்குற்றேன் என்கண்டாயே.
(அப்பர்)

## திருவாசகம்

மாவடு வகிர் அன்னகண்ணிபங்கா ! உன்
மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்நின்
குறிப்பறியேன்
பாவிடை ஆடு குழல் போல் கரந்து
பரந்துள்ளம்
ஆ! கெடுவேன் உடையாய் உன்
அடைக்கலமே. (மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்து என்
கனகனே! ஓலம் என்று ஓலிட்டு
என்பெலாம் உருக்கும் அன்பர்தம் கூட்டத்துள்
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடி நின்றுடப்
பனிமலர்ச் சோலை சூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே.

(சேந்தனார்)

## திருப்பல்லாண்டு

நிட்டையிலா உடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னை பாத்தன் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

(சேந்தனார்

## பெரிய புராணம்

எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
"உண்மையாவது"! பூசனை என உரைத்தருள
அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து.

(சேக்கிழார்)

திருச்சிற்றம்பலம்

பின்வரும் பாடல்களைச் சொல்லி
பஞ்ச கவ்வியங்களுக்கு வழிபாடு செய்தல்
பஞ்ச கவ்வியம் — பால், தயிர், நெய், பசும்
சாணம், கரைத்த நீர், (பசு மூத்திரம்)

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் ஐந்து ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டமில்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

(அப்பர்)

இதன் பிறகு திருபொற் சுண்ணம் இடித்தல் சிறு பாத்திரத்தில், இலை தொன்னையில் திருமஞ்சனப் பொடியை இட்டு ஒரு மாங்கொத்தை மலர் சுற்றி உலக்கையாக அழைத்துக் கீழ் வரும் பாடலைச்சொல்லி, ஒவ்வொரு பாடல் முடிவிலும் மாங்கொத்து உலக்கையால் இடிக்கச் செய்தல் வேண்டும்.

1) காசணிமின்கள் உலக்கை யெல்லாம்
காம் பணி மின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள
நின்று நிலாவுக, என்று வாழ்த்தித்
தேசமெலாம் புகழ்ந்தாடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே.

2) முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயல் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோடு ஆட ஆட
ஆடப் பொற் சுண்ணம இடித்து நாமே.

3) வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்துநாமே.
திருச்சிற்றம்பலம்

(மாணிக்கவாசகர்)

கலசங்களில் எழுந்தருளி உள்ள சிவசக்தியை இறந்தோரின் வலது காதின் வழியாக உள்ளத்தில் எழுந்தருளச் செய்தல்.

முப்புரி நூலாகப் பிடித்து, வழிபாடு செய்த சிவசக்தி கலசங்களில் சுற்றி அதன் மற்றொரு நுனியை இறந்தவரின் வலது காதில் சுற்றிக் கலசங் களில் உள்ள சிவ சக்தியை இறந்தவரின் உள்ளத் திற்கு வரும்படியாகப் பாவித்துச் சிவ! சிவ!! என்று சொல்லிக் கொண்டே, மாங்கொத்தினால் கலசங்களிலிருந்து இறந்தவர் காதுவரை ஐந்து

முறை நூலைத் தடவிக்கொண்டு வரவும். இதன் பிறகு சிவசக்தி இறத்தவரின் உள்ளத் தாமரையில் எழுந்தருளி இருப்பதாகக்கொண்டு திருமுழுக் காட்ட வேண்டும்.

குளிப்பாட்டல்

மூன்று குடமோ அல்லது ஐந்து குடமோ நீர் கொணர்ந்து வைத்துக்கொண்டு குளிப்பாட்டத் தொடங்கவும்.

இறந்தோரின் பிள்ளைகளும் தாயாதிகளும் இறந்தோர்க்கு எண்ணெய் சீயக்காய் தொட்டு உச்சி யில் வைக்கச் செய்து சிவபுராணத்தைச் சொல்லிக் கொண்டே, முன்னற் பூசை செய்து வைந்திருக் கும் பஞ்ச கௌவியங்களினால் முழுக்காட்டிக் கடைசியில் முன்னர் இடித்து வைத்திருந்த திருமஞ் சனப்பொடியை மகா கலசங்களில் நீரில் கலந்து அர! அர!! மகாதேவா!!! என்ற சிவநாம முழக்கத்துடன் கலசங்களில் உள்ள நீரைத் தலை முதல் பாதம் வரை முழுக்காட்டி; வேறு இடத்தில் சவத்தைக் கிடத்திப் புத்தாடை சாத்தி, மலர்மாலை அணிவித்து, தூபம், தீபம், கற்பூரம் காட்டி உணவு படைத்து அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் சவத்தை முழுவணக்கங்களுடனும் உடன் எடுத்துக் கொண்டு இடுக்காட்டில் சமாதி செய்தல் வேண்டும்.

சமாதி செய்தல்

குழியை ஆழமாகத் தோண்டி அதில் உப்பு, திருநீறு வில்வம் முதலியவற்றைக் கொட்டிச்

சவத்தை எடுத்துக் குழிக்குள்வைத்து. சவத்தின் மீது மேற்கண்ட பொருள்களைப் போட்டு, சமாதியில் இறந்தவரின் மகனைக் கொண்டு மூன்று முறை மண்ணைத் தள்ளச் செய்து, பிறகு சமாதியை மூடவேண்டும்.

சமாதி மூடிய பின் சமாதிக்குக் கற்பூரம் காட்டி வழிபட்டு, யாவரும் சமாதியை வணங்கி இறுதி வணக்கம் செய்து நீரில் மூழ்கி, வீடு திரும்புதல் வேண்டும்.

## சமாதி பூசை

இறந்த மூன்றாவது நாள் அல்லது 16-வது நாள் கருமாதிநாள் குடும்பப்பழக்க வழக்கம் போல் செய்யலாம், ஒருவன் பிறந்து வளர்ந்து மறைகின்ற வரையில் பத்து முக்கிய சடங்குகள் செய்து பண்டைப் பெரியோர்கள் அமைத்துள்ளனர். நாம் தோன்றுவதற்குக் காரணமாகிய நமது தாய்தந்தையரின் 1. முதல் நாள் இரவுச் சடங்கு, (கர்ப்பதானம்) 2. கருவுற்ற 7-வது மாதம் செய்யும் வளை காப்பு, 3. பிறந்த 7-வது நாள் தூய நீராட்டி வீட்டிற்கழைத்தல் பிறந்த நாள் விழா. 4. பெயர் சூட்டல் 5. தொட்டலில் இடல் 6. குடுமி வைத்தல் (பிறந்தமுடி வாங்குதல்) 7. காது குத்தல், 8 பள்ளிக்கு வைத்தல், 9. திருமணம் 10 இறந்தநாள் சமாதி செய்தல். கருமாந்திரம் அல்லது அந்தி இட்டி. கடைசியாகச் செய்யும் கருமாந்திரம், கருமம் + அந்திரம் கருமாந்

திரம் = கடைசியாகச் செய்யும் வேலை. இன்றைய நாளில் கருமாதி என்று பொதுவாகக் கூறுவர். அந்தி + இட்டி = கடைசியில் செய்யும் வேள்வி என்பது இதன் பொருள்.

கருமாந்திரம் செய்யும் நாள் வீடு முதலியன பூசி வழித்துத் தூய்மை செய்து, இடுகாட்டில் உற்றார் உறவினருடன் சென்று சமாதியை மெழுகிப் பூசிக் கரைகட்டி, அன்று வீடு முதலியன பூசி, மெழுகிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

## சமாதியின்மீது சிவலிங்கம் நிலைநிறுத்தல்

களிமண்ணை நன்கு கெட்டியாகப் பிசைந்து சிவலிங்கம் செய்து, தலைமாட்டில் வைத்து, அதன் முன்னால் நந்தி செய்து அமைத்து, நீண்ட உருண்டையாக இரண்டு பிடித்துச் சிவலிங்கத்திற்கு நீர் விழும் பக்கமாகிய கோமுகத்தின் அருகில் சண்டிகேசுவரராக ஒன்றையும் மற்றொரு பக்கம் பிள்ளையாராக ஒன்றையும் வைத்தல் வேண்டும். மூர்த்திகளில், முன்னே கலசங்களுக்குச் சொல்லிய படி மூர்த்திகளை எழுந்தருளச் செய்து தீபம் ஏற்றி வைத்துப் பஞ்சாமிர்தம், பால், தயிர், முதலிய முழுக்காட்டும் பொருள்களால் முழுக்காட்டி, ஆடை சாத்தித் திருநீறு சந்தனம், பொட்டு, முதலியன இட்டு மலர் சூடி அர்ச்சனை செய்து உணவுப் பொருள்களைப் படைத்துப் பஞ்சபுராணம் சொல்லி வழிபாட்டை முடித்தல் வேண்டும்.

## பஞ்ச புராணம்

பஞ்சபுராணம் என்பது, தேவாரத்தில் ஒரு பாட்டு, திருவாசகத்தில் ஒரு பாட்டு, திருவிசைப் பாவில் ஒரு பாட்டு, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாடல் சொல்லுதல் வேண்டும். இறந்தவர்களுக்காகச் செய்யும் சடங்குகளின்போது நிலையாமையைக் குறிக்கின்ற பாடல்களையும் திருமணம் போன்ற நல்ல காரியங்கள் நடக்கும்போது மங்களமான பாடல்களையும் சொல்லுதல் வேண்டும். பூசைமுடிவில் கீழ்வரும் வாழ்த்துப் பாடலைச் சொல்லி சமாதி பூசையை நிறைவு செய்தல் வேண்டும்.

## வாழ்த்துப்பா

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வவெண் திருநீறு சிறக்கவே.

சமாதி மீதுள்ள சனிகலிங்கத்திற்கு முழுக்காட்டும் போது சிவபுராணம் சொல்லிக்கொண்டு செய்யவும்.

## திருச்சிற்றம்பலம்

சாமதி பூசை செய்த பிறகு, வீடு வரும்வழியில் உள்ள பிள்ளையாருக்கு வழிபாடு செய்து வணங்கி இறந்தவர் நற்கதியடைய வேண்டி வழிபட்டு வீட்டிற்கு வந்து

இறந்தவரின் உடல் கிடத்தப்பட்டிருந்த இடத்தில் குத்துவிளக்கேற்றி 5 அல்லது 7 இலைகளில் உணவுகள் பறிமாறிப் படைத்து உண்டு கருமாந்தர நிகழ்ச்சியை முடிக்கலாம்.

திருச்சிற்றம்பலம்

1) காரைகள் கூகைமுல்லை களவாகை ஈகைபடர்
தொடரிகள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மும் சுடுகாடு அமர்ந்த சிவன்மேய
சோலை நகர்தான்
தேரைகள் ஆரை சாய மிதிகொள்ள வாளை குதி
கொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல்வாரி வயன்மேதி வைகும் நனிபள்ளி
போலும் நமர்காள்

2) கடல்வரை ஓதம்மல்கும் கழிகானல் பானல்
கமல்காழி என்று கருதப்
படுபொருள் ஆறு நாலும் உளதாக வைத்த பதியான
ஞான முனிவன்
இடுபறை ஒன்ற அத்தர்பியன் மேல் இருந்து இன் இசை
யால் உரைத்த பனுவல்
நடு இருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க வினை
கெடுதல் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்

## திவசம்

## ஆண்டு நினைவுநாள்

ஒருவர் இறந்து ஓர் ஆண்டு வரை அந்த உயிர் ஒருவிதமயக்க நிலையிலேயே இருப்பதால், இறந்த உயிரை நோக்கி ஓர் ஆண்டு நிறைவிலேயே நினைவு நாள் கொண்டாடப் பட்டு வருகிறது

திதி = நாள் திவசம் = நாள் இறந்தவர்களின் இறந்த திதி அதாவது இறந்த நாளிலேயே இது கொண்டாடப்பட்டு வருகின்றது இது வடவர் முறை

தமிழகத்தில் நாயன்மார்கள் குரு பூசைகள் ஆண்டு நிறைவில் நட்சத்திரத்திலேயே கொண்டாடப் படுவதால், ஆண்டு நிறைவில் இறந்த மாதத்தில் இறந்த நட்சத்திரத்தில் திவசம் என்னும் இவ்வழிபாட்டினைச் செய்தல் முறையாகும்.

## திவசம்

வீட்டை மெழுகித் தூய்மை செய்து, மாவிலை தோரணம் கட்டி, வீட்டின் நடுக் கூடத்தில் வழி பாட்டைத் தொடங்குதல் வேண்டும்.

தெற்கு யமபுரம் உள்ளதாகவும், இறந்த உயிர் கள் தென் திசையில் வாழ்வதாகப் பழம் நூல்கள் பகர்வதாலும், திருக்குறள், புறநானூறு முதலிய நூல்களில் இறந்தவர்களைக் குறிப்பிடும் போது '' தென்புலத்தார் '' என்று குறிப்பிடுகின்றபடியா லும், இந்தச் செய்கைகளைச் செய்கின்ற இறந்த வரின் மகனை மனைவியுடன் தெற்கு நோக்கி ஒரு இருக்கையில் அமரச் செய்து; நடாத்தி வைக்கும் ஆச்சாரியர் வடக்கு நோக்கி இருந்து செய்தல் வேண்டும்.

## முதலில் சிவ பூசை

முதலில் முன்னற் கூறியபடி தலை வாழையி லையை இட்டு, அதில் பச்சரியைப் பரப்பி மத்தி

யில் அறு கோணச் சக்கரத்தை வரைந்து மத்தியில் 'சிவ' என்ற மந்திரத்தை எழுதி, நீர் நிறைந்த இரண்டு கலசங்களை வைத்து ஆடை சாத்தி சந்தனம், குங்குமம் இட்டு மலர் மாலை சாத்தி அலங்கரித்து முதலில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்துப் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து தூபம் தீபம் காட்டி வழிபாடு இனிது நிறைவெய்த வேண்டிக்கொண்டு மேற்கொண்டு வழிபாட்டைத் தொடங்குதல் வேண்டும்.

## சிவ சக்தி கலச பூசை

சிவ கலசத்தில் சிவனையும், சக்தி கலசத்தில் சிவ சக்தியையும் எழுதருளி வழிபாட்டை ஏற்கும் படி முன்னரே கூறியபடி மலர்களைக் கையில் எடுத்துக்கொண்டு '' மாறி நின்று என்னை'' என்று தொடங்கும் திருவாசகப் பாடலைச் சொல்லிக் கொண்டு, கலசங்களில் மலர்களைத் தூவி, சிவசக்தி கலசங்களில் அம்மை அப்பரை எழுந்தருளச் செய்தல் வேண்டும்.

## அருச்சனை

### சிவ அருச்சனை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆற்றங்கம் நால் வேதம் ஆனாய் போற்றி

[illegible]

காற்ருகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம் (அப்பர்)

## சக்தி அர்ச்சனை

சுரும்புமுரல் கடிமலர் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால் சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத் தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பும் இள நகை போற்றி
ஆரணம் நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி.

## தூபம் காட்ட

பெரும் புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை
உள்ளே வைத்து
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினல்
இடவல்லார்க்குக்
கரும்பினுன் கட்டிபோல்வார்கடவூர் வீரட்டனுரே.

(அப்பர்தேவாரம்)

## தீபம் காட்ட

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே.

(திருமந்திரம்)

உணவு ஊட்டி, கற்பூரம் காட்டி பிறகு பஞ்ச புராணம் பாடுதல் வேண்டும்.

பஞ்சபுராணம் என்பது தேவாரம், திருவாசம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, பெரியபுராணம், நிறைவில் வாழ்த்துப்பா.

## தேவாரம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற்கு அரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய், விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவ தினியே

## திருவிசைப்பா

கண்பனி அரும்பக் கைகள் மொட்டித்(து)என்
களைகணே ஓலம் என்று ஓலிட்டு
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்து
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பலதெளி தேன்பாடி நின்றாடப்
பனிமலர் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

மண்ணுகதில்லை, வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

நன்மை பெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத்தொண்டர் வணங்கி
மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர் தம்
சென்னியிசைப் பாத மலர் சூட்டினான் சிவபெருமான்.
திருச்சிற்றம்பலம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே.
திருச்சிற்றம்பலம்

## வேள்வி செய்தல்

சிவ சக்தி கலசங்களுக்கு முன்னால் மணல் அல்லது நெல் உமி பரப்பி; உலர்ந்த மா, ஆல், அரசு குச்சிகளைக் கொண்டு சிவபுராணம் அல்லது திருவையாற்று அப்பரடிகளின் திருத்தாண்டகங்களைச் சொல்லி தீ வளர்க்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

1. எல்லா உலகமும் ஆனாய் நீயே;
    ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
    ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
    புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
    திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

2. ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
    உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
    மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
    பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
    திருவையாறகலாத செம்பொற் சோதீ.

திருச்சிற்றம்பலம் (அப்பர்)

இறந்த நேரத்தை ஒட்டிக் குற்றங்கள் இருந்தால் அவைகளை அகற்றக் கோளறு பதிகத்தைக் கூறி மீண்டும் தீ வளர்த்து வேள்வியை நிறைவு செய்க.

## கோளறு பதிகம்

1. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன்
வெள்ளி, சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

2. என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல் சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ, டொன்றோ. டேழு; பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

3. தேனமர் பொழில் கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரைவந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்.

## தேவ பிண்டம் அளித்தல்

அரிசி, உளுத்தம்பருப்பு ½ படி அளவு எடுத்து மாவாகச் செய்து அத்துடன் நாட்டுச் சர்க்கரை என்ளு இவைகளையும் சேர்த்துப் பழம் இரண்டு உறித்துப்போட்டு பிசைந்து 5 உருண்டையாகப் பிடித்து வைத்துக்கொண்டு.

இந்தப் பிண்டம் பாட்டனுடைய தந்தை, பாட்டன், தகப்பனார், குலகுரு, தங்கள் வம்சத்தில் வாரிசு இல்லாமல் இறந்தவர்களுக்காக தர்மப் பிண்டம் ஆக ஐவருக்குக் கொடுத்தல் வேண்டும். பிண்டம், கொடுப்பவரைத் தெற்கு நோக்கி ஒரு காலைக் குத்துக்காலிட்டு அமரச் செய்து தலை வாழை இலையை இட்டு அதில் பிண்டம் கொடுப்போர் இடது கையை ஊன்றிக்கொண்டு வலது கையால் பிண்டம் ஒவ்வொன்றாக எடுத்துக் கோத்திரம், வருடம், மாதம், தேதி கீழ்வரும்படி ஒவ்வொருவர் பேரைச் சொல்லி ஊன்றியிருக்கும் கைக்குள்ளாகக் கொண்டு போய் இலையில் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக வைத்தல் வேண்டும்.

### உதாரணம்

காளயுக்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் முதல் நாள் புதன்கிழமையும் தேய்பிறைப் பகுதியும் கூடிய நன்னாளில் சிவகோத்திரம் முப்பாட்டனார் இராமசாமி முதலியார், அவர்கள் ஆத்மசாந்தியின் பொருட்டுத் தேவப் பிண்டம் அளிக்கின்றேன்.

பாட்டனார் பச்சியப்ப முதலியார் ஆத்ம சாந்தியின் பொருட்டுத் தேவ பிண்டம் அளிக்கின்றேன். தகப்பனார் முத்துசாமி முதலியார் ஆத்ம சாந்தியின் பொருட்டுத் தேவ பிண்டம் அளிக்கின்றேன். எங்கள் குலத்தில் குல குருவாக இருந்தவருக்குத் தேவ பிண்டம் அளிக்கின்றேன். எங்கள் குலத்தில் பிறந்து ஆண் வாரிசு இல்லாமல் இறந்தவர்களுக்காகத் தர்ம பிண்டம் அளிக்கின்றேன் என்று ஒவ்வொன்றாக அளித்த பிறகு பண்டங்களின் மேல் மலர் தூவித் தீபம் கற்பூரம் காட்டிய பிறகு யாவற்றையும் சிவ சிவ என்று சொல்லிக்கொண்டு பிண்டங்கள் யாவையையும் ஒன்று சேரும்படி மடித்து இலையுடன் மடக்கி ஒரு பாத்திரத்தில் வைத்து, அதிலேயே எள் கலந்த தண்ணீரை முன்னே சொல்லியபடி கோத்திர முதலியனகூறிவிட்டு இவை யாவற்றையும், ஆறு அல்லது கால்வாய்அல்லது கிணற்றில் விட்டுவிடவும்.

## எள்ளும், தண்ணீரும் இடுதல்

முன்பு பிண்டம் அளித்தபடியே தெற்கு நோக்கி அமர்ந்துகொண்டு ஒரு பாத்திரத்தை மடியில் வைத்துக் கொண்டு ஆள்காட்டி விரலை நீட்டிக் கொண்டு, பாம்பு விரல், மோதிர விரல், சுண்டு விரல் இவைகளைச் சற்று குவித்துக் கொண்டு அந்தக் கையில் மணையியைக் கொண்டு எள் கலந்த தண்ணீரைக் கீழ் வருவது போல் சொல்லிக்கொண்டு சிறிது சிறிதாக ஊற்றவேண்டும்.

காளயுக்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் பத்தாம் நாள் வளர்பிறை கூடிய நன்னாளில் சிவ கோத்திரம் முப்பாட்டனார், பாட்டனார் தகப்பனார் இவர்கள் பெயர்களைச் சொல்லி, இவர்கள் மனோ, வாக்கு காயங்களால் அறிந்தோ அறியாமலோ செய்த வினைகளுக்கு ஈடாக எந்த உலகில் எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் ஆத்ம சாந்திபெற்று உய்தி பெற இன்று நான் செய்த வழிபாட்டின் பலன், சொர்ண தானத்தின் பலன் யாவற்றையும் தத்தம் செய்கிறேன்.

"மூவேழ் சுற்றம் முறன்உறு நரகிடை
ஆழா மே காத்தருள் அரசே போற்றி"

(திருவாசகம்)

மும்முறை சொல்லி மூன்றுமுறை எள்ளும் தண்ணீரும் பாத்திரத்தில் ஒழுக விழும்படி நீர் விடவும். பிறகு அப்புனித நீரைத் தலையில் தெளித்து கண்ணில் ஒற்றிக்கொள்ளவும் இதன் பிறகு உணவு படைத்து உண்டு மகிழவும்.

திருச்சிற்றம்பலம்

## அமாவாசை

இறந்துபட்ட உயிர்கள் யாதனா சரீரம் என்ற நுண் உடல் கொண்டு தான் செய்த நன்மை தீமை களுக்கு ஏற்பச் சொர்க்க நரகங்களில் இன்ப துன்பங் களை நுகர்ந்து, சூரிய மண்டலத்தை அடைகின்றன. அங்கிருந்து இறைவன் ஆணைவழிச் சூரியனின் கதிர்

மூலமாக மண்ணை அடைந்து தாவரங்களின் மூலம் தந்தையை அடைந்து இருதிங்கள் தந்தையினிடம் தங்கி தந்தையின் வீரியம் மூலமாகத் தாயின் கருப் பையை அடைந்து 10 மாதம் குழந்தையாக முழு வளர்ச்சி பெற்று மண்ணில் பிறந்து விழுந்து மகனாக வளர்ந்து மீண்டும் தன் உயிர்பயணத்தை தொடங்குகிறது. உயிர் ஆண்டவனைப் போல நிலையானது; அழியாதது. தந்தையின் வீரியத்தில் உள்ள உயிர் அணுவே தாயின் கருப்பையை அடைந்து மகவாகப் பிறந்து வளர்கின்றதென்பதை விஞ்ஞானமும் மெய்ஞானமும் கண்ட உண்மை ஆகும் தந்தையின் வீரியத்தில் உயிர் அணு எப்படி வந்தது? யார் அதில் கொண்டுவந்து சேர்த்தார்கள் என்றுகேட்டால் விஞ்ஞானி பதில் சொல்லாமல் விழிக்கின்றான். எப்படியோ தந்தையின் வீரியத்தில் உயிர் வந்தது என்று கூறுகிறான் இதற்கு மெய்ஞ் ஞானியே மேலேகண்டவாறு பதில் சொல்கின்றான்.

## ஏன் இறந்தவர்களை நோக்கி அமாவாசை அன்று வழிபாடு செய்யவேண்டும்.

சூரியனைப் பூமி நீளவட்டமாகச் சுற்றிக் கொண்டு வருகின்றது. சந்திரன் பூமியையும் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி வருகின்றது. இம்மூன்றும் ஒரே நேர்வரிசையில் வரும் நாளைத் தான் அமாவாசை என்று கூறுகின்றோம். சரியாக நேராக இருந்தால் ஒன்றை ஒன்று மறைப்பதால் ஒன்றின் நிழல் ஒன்றில் விழுந்து கிரகணம் தோன்றுகின்றது. அமாவாசை அன்று சூரியனுக்கு

அருகில் பூமி வருகின்றது. அதனால்தான் அமாவாசையன்று உலகில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நோயாளிக்கு ஒரு கண்டமாக, பைத்தியம் விஷம், கடல் கொந்தளிப்பு முதலியவற்றின் தொல்லை மிகுகின்றது.

அமாவாசை அன்று சூரியனுக்குச் சற்று அருகாமை பூமி வருகின்றபடியால் சூரிய மண்டலத்தில் உள்ள உயிர்கள் பூமியிலுள்ள தமது உற்றார் உறவினரை நினைக்கின்றன. அதே சமயத்தில் மண்ணுலகில் வாழும் நாமும் இறந்துபட்ட நமது முன்னோர்களை நினைந்து வழிபட்டால் எண்ணங்களின் தொடர்பால் முன்னோர்கள் மனசாந்தி பெறுகின்றனர்

மூன்று தலைமுறைக்கு முற்பட்ட உயிர்கள் மண்ணுலகில் பிறந்திருக்கும் ஆகையால் நமக்கு முன் இறந்துபட்ட முப்பாட்டன் வரை மூன்று தலைமுறையினருக்கே திதி முதலிய வழிபாடு செய்கின்றோம்.

அமா+வசியா என்று இரு வட சொற்களின் சேர்க்கை பெற்று தமிழிலுள்ள ஐ என்று விகுதியும் ஓசை நயத்திற்குச் சேர்த்து அமாவாசை என்ற சொல் தோன்றுகிறது.

அமா என்றால் அருகில் என்றும், வசியா= வசித்தல், அதாவது வாழ்தல் என்றும் பொருள் அமாவாசை என்ற சொல் பூமி சூரியனுக்கருகில் வருகின்றது என்ற அறிவியல் கருத்தைத் தெரிவிக்கின்றது.

அமாவாசை அன்று அதிகாலை குளித்து வழி பாடு செய்துகொண்டு, தெற்கு நோக்கி அமர்ந்து முன்னே சொன்னபடி ஆண்டு, மாதம், நாள் என் கலந்த நீரை விட்டு விட்டுக் குத்துவிளக்கு முன்னிலே யில் இறந்தோரின் நிழற்படத்தை வைத்து உணவு படைத்து உண்ணவேண்டும். அன்று, சக்திக்கு ஏற்ப அன்னதானம் செய்தல் நலம். குறைந்த அளவு ஒரு பிடி அன்னம் காக்கைக்கு இட்டுவிட்டு உண்டு மகிழவும்,

என் கலந்த தண்ணீர் விடுவதற்கு முன் தெற்கு நோக்கி அமர்ந்து விநாயக வணக்கம் செய்து நமது முன்னோர்கள் நற்கதி அடைய மனதில் தியானித்துக் கீழ்வரும் பாடலைச் சொல்லி இறைவனைத் துதிக்கவும்.

அவ்வினைக் கிவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உன்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறுதிருநீலகண்டம்.

அன்றைய ஆண்டு மாதம் நாள் சொல்லித் தங்கள் இறந்து பட்ட முன்னோர்கள் மூன்று தலை முறையினர் பேர்களைச் சொல்லி இவர்கள் மனம் வாக்குக் காயங்களால் செய்த வினைகளுக்கு ஈடாக எந்த உலகில் எந்த நிலையில் இருந்தாலும் அவர் களுடைய ஆத்மசாந்தி பெற்று உய்திபெற இன்று

நான் செய்கிற சிவபூசா பலன், சிவாலய தரிசன பலன், அன்னதான பலன் யாவற்றையும் தத்தம் செய்கிறேன் என்று கூறி.

"மூவேழ் சுற்றம் முரன்உறு நரகிடை ஆழாமே
காத்தருள் அரசே போற்றி !!

என்று மும்முறை சொல்லி முன்னே சொல்லியபடி நீர்விட்டு வழிபாட்டை முடிக்கவும்.

இதன்பிறகு நண்பகல் ஐந்து இலைகளில் உணவுகளைப் பறிமாறி குத்துவிளக்கு ஏற்றிவைத்து வழிபட்டு உற்றார் உறவினர்களுடன் உண்டு மகிழ்க.

திருச்சிற்றம்பலம்

உயிர் பிரிகின்றபோது அருகில் உள்ளோர் ஓத வேண்டிய திருவாசகப் பதிகம்.

அடைக்கலப்பத்து

செழுக்கம லத்திர ளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்த மனத்தடி யாருடன் போயினர் யான்பாவியேன்
புழுக்க ணுடைப்புன் குரம்பைப்பொல் லாக்கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்தடி யேன்உடை யாயுன் அடைக்கலமே.

வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

பெரும்பெரு மானென் பிறவியைவே ரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி யாமனின்ற
அரும்பெரு மான் உடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தினின் கழற்புணை கொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யா னிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனனுடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய் அடி யேனுன் அடைககலமே.

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்அடி யேனுன் அடைக்கலமே.

மின்கணி னார்நுடங்கும் இடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கண னாய்ப்புரள் வேனைப் புரளாமற் புகுந்தருளி
என்கணி லேஅமு தூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கண னேயுடை யாய் அடி யேனுன் அடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக் கினேன்வினை யேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய் அடி யேனுன் அடைக்கலமே.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை